# 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## அ.வ.எண். 532/2015

2022 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் P.W.1 ன் சாட்சிய வாக்கு மூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.செந்திகுமார் | வட்டம் : | திருநெல்வேலி |
| த/பெ : | திரு.விஜயராஜ் | கிராமம் : | |
| வயது : | 33 | மதம் : | |

**06.08.2022 முதல் விசாரணை:** நான் 3 ம் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். 25.05.1993 தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.1 ஆகும். 25.04.1996 தேதியிட்ட சுடலைமணி பெயரில் உள்ள கரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். 12.01.2005 தேதியிட்ட பேச்சிமுத்து அவர்கள் சுடலைமணியின் மற்ற வாரிசுகளுக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.3 ஆகும். 18.05.2006 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகும். 22.06.1970 தேதியிட்ட வாதியின் தகப்பனார் செல்லையா நாடார் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.5 ஆகும்.11.04.1979 தேதியிட்ட 1 ம் பிரதிவாதி குடும்பத்திற்குள் பிற்பபுவித்துக்கொண்ட பாக உடன்படிக்கை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகும். உபயவாதிகள் சொத்தை காட்டக்கூடிய மாதிரி வரைபடம் வா.சா.ஆ.7 ஆகும். தபசில் சொத்திற்குரிய தீர்வை ரசிதுகள் வா.சா.ஆ.8 ஆகும். 07.11.2015 தேதியிட்ட வாதி, சர்வேயர் மற்றும் மேலப்பாளையம் உதவி ஆணையருக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் ரசீது மற்றும் ஒப்புதல் அட்டை 2 எண்ணிக்கை வா.சா.ஆ.9 ஆகும். 04.11.2015

தேதியிட்ட தபசில் சொத்திற்கு மேலப்பாளையம் வார்டு அலுவலகத்தில் வழங்கிய டவுண் சர்வே வரைபடம் வா.சா.ஆ.10 ஆகும். நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1, ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 (2 எண்ணிக்கை), நகர அளவை வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகும். நகர சர்வே பதிவேடு நீ.ம.சா.ஆ.4. வா.சா.ஆ.1 மற்றும் 4ன் அசல் வங்கியில் உள்ளதால் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, மேற்படி ஆவணங்கள் நகல் என்று பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியிடு செய்யப்படுகிறது.